DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.55/2025**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பிரபாகரன் |
| Husband Name | : | காத்தவராயன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2026.

( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தூம்பக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் பர்னிச்சர் கடை வைத்து நடத்தி வருகிறேன். சாட்சி எண்.2 மாரீஸ்வரன், சாட்சி எண்.3 பகவத்சிங் ஆகியோர்கள் என் கடையில் சம்பவ சமயம் வேலை செய்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரி என் TN 67 AP 7643 என்ற தோஸ்த் நான்கு சக்கர லோடு வண்டியின் முன்பக்க கண்ணாடியை 2017ம் வருடம் காலை 11.00 மணியளவில் சிவரக்கோட்டையில் வைத்து எனக்கு தேதி, மாதம் ஞாபகமில்லை. கம்பால் அடித்து உடைத்துவிட்டார். போலீஸார் என்னை விசாரித்தார்கள். புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அந்த புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரிலுள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது. அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 04.04.2017ம் தேதி காலை சுமார் 11.00 மணியைபோல நானும், என் கடையில் வேலை பார்க்கும் மாரீஸ்வரன் மற்றும் பகவத்சிங் ஆகியோர்கள் வேலை செய்து கொண்டிருந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி என் கம்பெனிக்கு வந்து மாரீஸ்வரனை ஒக்காலோலி தேவிடியா மகனே என்று திட்டியும், அவரை கையாலும் அடித்துக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நான் ஏன் இப்படி பேசுகிறாய், அடிக்கிறாய் என்று கேட்டதற்கு என்னையும் திட்டி எப்படிடா இங்கு கடை வைத்து நடத்துகிறாய் என்று கூறி என்னை மிரட்டி என் கடைக்கு முன்னால் நிறுத்தியிருந்த TN 67 AP 7643 என்ற பதிவு கொண்ட தோஸ்த் வாகனத்தின் முன்பக்க கண்ணாடியை கல்லால் அடித்து உடைத்துவிட்டார் என்றும் அது குறித்து நான் போலீஸ் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் போலீஸ் விசாரணையில் கல்லால் அடித்து கண்ணாடியை உடைத்துவிட்டதாக சொல்லிவிட்டு முதல் விசாரணையில் கம்பால் அடித்ததாக சொல்லியுள்ளேன். நான் போலீஸார் எழுதிய புகாரில் தான் கையொப்பம் போட்டேன். நான் நேரடியாக சம்பவத்தை பார்க்கவில்லை. கடையில் உள்ளவர்கள் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அதனால் தான் தேதி, நேரம் ஞாபகமில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை -</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.03.24 17:40:06 +0530

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**

மதுரை.